DINA MALAR

7 FEB 2023

PAGE 3



# மத்திய பல்கலை நிகழ்கலை துறை மாணவர்கள் நாட்டுப்புற ஆடல், பாடலோடு பொங்கல் குதுாகலம்

**புதுச்சேரி, பிப். 7–**

புதுச்சேரி மத்திய பல்கலைக்கழக நிகழ்கலை துறை மாணவ, மாணவிகள் பொங்கல் விழாவை நாட்டுப்புற பாடல்களை பாடி கோலாகலமாக கொண்டாடினர்.

புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகம் நிகழ்கலை துறைக்கு ஸ்கூல் ஆப் பெர்பாமிங் ஆர்ட்ஸ் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

கடந்த 33 ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கும் இந்த நிகழ்கலை துறை நாடக பள்ளியில் பயின்ற மாணவ, மாணவிகள் பலர் தற்போது பல துறைகளில் சாதனை படைத்தவர்களாக உள்ளனர்.

மத்திய பல்கலை நிகழ்கலை துறையில் இயக்குனராக பணிபுரிந்த இந்திரா பார்த்தசாரதி, சிறந்த எழுத்தாளராகி பத்மஸ்ரீ விருது பெற்றார். பொன்னியின் செல்வன் படம் எழுத்தாளர் குமரவேல் இங்கு பயின்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கு பயின்ற பலர் எழுத்தாளர், இயக்குனர், நடிப்பு துறைகளில் சாதித்து வருகின்றனர்.



■ புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் நாடகத்துறை சார்பில் நடந்த பொங்கல் கொண்டாட்டத்தில் நடனமாடிய மாணவ, மாணவிகள்.

கொரோனா காலத்தையொட்டி, கடந்த இரு ஆண்டுகளுக்கும் மேலாக மத்திய பல்கலைக்கழக நிகழ்கலை துறையில் நிறுத்தப்பட்டிருந்த பொங்கல் விழா கலை நிகழ்ச்சி கொண்டாட்டம் நேற்று நடைபெற்றது.

இங்குள்ள நிகழ்கலை துறை மாணவ, மாணவிகள், பொங்கல் வைத்து சூரியனை வழிபட்டனர். இதில், தமிழர்களின் பாரம்பரிய உடையான வேட்டி, சேலை அணிந்து மாணவ, மாணவிகள் நாட்டுப்புற பாடல்களை பாடியும், ஆடியும் மகிழ்ந்தனர்.

தொடர்ந்து உறியடி, பறையாட்டம், ஒயிலாட்டம், குறவன், குறத்தி ஆட்டம் ஆடி மகிழ்ந்தனர். இதில், முதலாம் ஆண்டு மாணவ, மாணவிகளும் பாரம்பரிய உடையில் பங்கேற்றனர்.

ஏற்பாடுகளை, நிகழ்கலை துறை டீன் ஸ்ரீதரன், நாடகத்துறை தலைவர் (பொறுப்பு) வேலு சரவணன், பேராசிரியர் ராஜா ரவிவர்மா, இசை ஆசிரியர் முருகவேல், மேலாளர் கலியபெருமாள் ஆகியோர் செய்தனர்.

MAALAI MALAR

7 FEB 2023

PAGE 8

நாட்டுப்புற ஆடல், பாடலுடன்

## பல்கலைக்கழக மாணவர்கள் பொங்கல் கொண்டாட்டம்

புதுச்சேரி, பிப்.7—

புதுவை மத்திய பல்கலைக்கழகம் நிகழ்கலைத்துறைக்கு ஸ்கூல் ஆப் பெர்பார்மிங் ஆர்ட்ஸ் என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இத்துறையின் இயக்குனராக பணிபுரிந்த இந்திராபார்த்தசாரதி சிறந்த எழுத்தாளராகி பத்மஸ்ரீ விருது பெற்றார். பொன்னியின் செல்வன் திரைப்பட எழுத்தாளர் குமரவேல் இங்கு படித்தவர்.

இங்கு படித்த பலர் இயக்குனர், நடிப்பு துறைகளில் சாதனை புரிந்து வருகின்றனர். 2 ஆண்டாக நிறுத்தப்பட்டிருந்த பொங்கல் கொண்டாட்டம் இந்த ஆண்டு நடந்தது.

இதில் தமிழர்களின் பாரம்பரிய வேட்டி, சேலை அணிந்து மாணவ, மாணவிகள் நாட்டுப்புற பாடல்களை பாடி; ஆடி மகிழ்ந்தனர். ஏற்பாடுகளை துறையின் டீன் ஸ்ரீதரன், நாடகத்துறை தலைவர் வேலு சரவணன், பேராசிரியர் ராஜாரவிவர்மா, இசை ஆசிரியர் முருகவேல், மேலாளர் கலியபெருமாள் செய்திருந்தனர்.

THE HINDU

7 FEB 2022

PAGE 2

Tuesday, February 7, 2023
CHENNAI

# Varsity professor gets Hungarian scholarship

**The Hindu Bureau**
PUDUCHERRY

Ujjwal Jana, Professor of English, Pondicherry University, has been awarded a Hungarian State scholarship for 2022-2023.

According to a press release, the scholarship funded by Tempus Foundation of the Government of Hungary, will go towards a collaborative research at the ELTE Department of English Studies, Eötvös Loránd University, Budapest Hungary.

Mr. Jana, who has edited an anthology on Digital Culture in Humanities: Contemporary Trends, has been working in the area of Indian poetics, critical humanities, and translation studies. He has also published several research papers in peer-reviewed national and international journals.

A Fulbright visiting lecturer, India Studies Programme, Indiana University, Bloomington, U.S., in 2007-2008, he was nominated for the Commonwealth Academic Staff Fellowship in the U.K. for 2013. Following the Sahitya Akademi Travel Grants Award in 2014, he was a visiting faculty in Department of English, Leipzig University, Germany and at Department of English, University of Johannesburg, South Africa in 2017.



Ujjwal Jana, professor of English, Pondicherry University.

He was awarded the Ministry of Education, Govt of India, funded international collaborative project in digital humanities under SPARC (Scheme for Promotion of Academic and Research Collaboration) to collaborate with Western Sydney University, Australia, for 2019-2023, the press note said. Pondicherry University Vice Chancellor Gurmeet Singh felicitated the professor.